தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIFImpact Factor3.5| Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12022026.19

# PATRONAGE IN WARFIELD
## Recordings in Purananooru

**T K Ramesh**[1*], **Dr. (Mrs.) P. Thamilarasi**[2],
[1]Ph. D., Research Scholar, Department of Tamil,
Karpagam Academy of Higher Education, Coimbatore - 641021
[2]Sr. Professor, Department of Tamil,
Karpagam Academy of Higher Education, Coimbatore - 641021
[*]Corresponding Author Email: alignandequip@gmail.com. Tel: 919845694194

**Article Info**
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 01-July-2026

**ABSTRACT**

Humanity survives because of good and beneficial thoughts and actions of men while managing their day-to-day life! However, humanity and humaneness are uplifted and made to thrive, because of great statesmen, whose upheld the noble thoughts and deeds, even in the most trying and adverse circumstances!

Nobility, Generosity, Mercy, Compassion, Sympathy and Empathy are some of the emotions which symbolise how the inner turmoils of the mans' feelings, are expressed explicity in action, in the noblest manner! This extreme benevolent response from any individual, is the evidence of the how the individual's SELF is psychologically mature and had evolved by his experiences of life, his wisdom, his learning and by his virtuous life!

This essay attempts to present the exhibition of human psyche in the Sangam Age, through Purananooru, one of the eight Anthologies of Sangam Literature, depicting the most vulnerable moments in the war field! A poet seeking patronage from a benefactor in the middle of a war at the war field and the benefactor willingly showering the patronage!

***KEYWORDS:*** *Humaneness, Humanity, Mercy, Compassion, Sympathy, Empathy, Generosity, Nobility.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in *DOI:* *https://doi.org/10.63300/tm12022026*

# போர்காலத்திலும் / போர்களத்திலும் - கொடைத் தன்மையின் வெளிப்பாடு

## புறநானூற்றின் பதிவுகள்

**[1] டி கே இரமேஷ்**
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, கற்பகம் உயர் கல்விக்கழகம், கோயம்புத்தூர் - 641021
**[2]முனைவர். திருமதி. ப தமிழரசி**
மூத்த பேராசிரியர், தமிழ்த்துறை,
கற்பகம் உயர் கல்விக்கழகம், கோயம்புத்தூர் – 641021

**முன்னுரை:**

காருண்யம், இரக்கம், பச்சாதாபம், அனுதாபம் என்னும் இந்த நான்கு மனித உணர்வுகளும் மனித நேயத்தின் அடையாளங்களாகும். இந்நான்கு உணர்வுகளை[யும் நாம் ஏறத்தாழ ஒன்று என நினைத்திருக்கிறோம். பெரும் வேறுபாடுகள் இல்லை என்பதே நம்மின் தெளிவு. அதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள இலக்கியத்திலிருந்து சில செய்திகளைக் காணலாம்

**காருண்யம்** என்பது- முரசுக்கட்டிலில் துயின்ற மோசீகீரணாரை தண்டிக்காமல், கவரி வீசி நின்ற சேர மன்னன் தகடூர் எறிந்த இரும்பொறையின் மனநிலை.

பிறர் நிலைக் கண்டு மனம் இரங்கி செயலாற்றுவது. (எ.கா) முல்லைக்கொடிக்கு தேர் ஈந்த பாரியின் மனநிலையும், மயிலுக்குப் போர்வை ஈந்த பேகனின் மனநிலை, **இரக்கமாகும்**.

**பச்சாதபம்: -** பிறரின் மன உணர்வை தனதாக உணர்தல். (எ.கா) முரசுக்கட்டிலில் துயின்ற புலவர் மோசீகீரணாரைக் கண்ட மன்னன் தகடூர் எறிந்த இரும்பொறை, மனதில் தோன்றிய உணர்வுகள் முறையே, **அதிர்ச்சி, கேள்விக்குறி, பச்சாதாபம், காருண்யம்** ஆகும்.

- முரசுக்கட்டிலில் ஒருவர் துங்குவது கண்டு மனதில் முதலில் அதிர்ச்சி கொண்டிருப்பான் மன்னன்.
- துங்குவது ஒரு மேண்மையானத் தமிழ்ப் புலவர் எனத் தெரிந்த பின், ஏன் இத்தகையவர், முரசுக்கட்டில் எனத் தெரிந்தும் உறங்கியிருப்பார், என்று மனதில் கேள்விக்குறி எழந்திருக்கும்
- தன்னைக் காண வெகுமோசீகீரணார் வெகுதூரம் நடந்து வந்திருப்பார் என ஊகித்து அவரின் களைப்பை உணர்ந்த பொழுது, மனதில் பச்சாதாபம் எழுந்திருக்கும்.
- கடும் தண்டனைக் கொடுக்க தக்கக் காரணம் இருக்கும் போதும், அந்நிலையில் இருந்து தன்னை உயர்த்திக் கொண்டு, கவரி வீசி நின்றபோது, சேர மன்னன் மனதில் காருண்ய உணர்வு மேலோங்கி நின்றதைக் காணமுடிகிறது

**அனுதாபம்: -** பிறரின் துன்பியல் நிலையைக் காணும்போது, அம்மனிதரின் மன உணர்வை புரிந்து கொள்வது அனுதாபமாகும். அதே சமயம், அம்மனிதரின் உள்ளத்து உணர்வை, தானும் உணரும் போது, ஏற்படுவது, பச்சாதாபமாகும். (எ.கா)

"... கருங் கண் கொண்ட நெருங்கல் வெம் முலை,
மையல் நோக்கின், தையலை நயந்தோர்,
அளியர் தாமே..." (புறம். 345.. அடைநெடுங் கல்வியார்)

மேற்கண்ட பாடல் வரிகளில் புலவர் வெளிப்படுத்துவது அனுதாபமாகும்.

தன் சகமனிதர்களை கண்ணியத்தோடும் மரியாதையோடும் நடத்தி, அவர்களின் திறன்களை வளர்த்து, ஒளிரச் செய்து, சுயமதிப்பினை உணரச்செய்து, வாழ வழி செய்யும் உணர்வுகளே மேற்காணும் நான்கு உணர்வுகளாகும்.

நாம் நமக்கு வெளியே நிகழும் நிகழ்வுகளால் தாக்கம் பெறும்போது, அந்தத் தாக்கத்தினை நாம் உள்வாங்கி, நம் மன நிலையின் முதிர்ச்சிக்கு ஏற்றவாறு செயலாற்றுகிறோம். நாம் இவ்வாறு தான் செயலாற்ற வேண்டும் என்று முடிவு செய்து, அவ்வாறு செயலாற்ற நமக்கு நாமே அந்த அதிகாரத்தை கொடுக்கும் போது, நம் முடிவுகள், சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டோ அல்லது உயர்ந்த லட்சியத்தினை அடிப்படையாகக் கொண்டோ இருக்கலாம்.

அமைதியான சூழ்நிலையில், புலவர்கள் மன்னன் மற்றும் வள்ளல்களிடத்து பரிசு வேண்டி இரந்து நிற்பது இயற்கை. ஆனால், மன்னன் போர்களத்தில் இருக்கும்போதும், போர்ப்பாசறையில் உள்ளபோதும், புலவர்கள் பொருள் வேண்டி இரத்தலும், மன்னன் மகிழ்ச்சியோடு பொருள் ஈதலும், பெரும் ஆச்சர்யத்தை ஏற்படுத்துகிறது. புரவலரும் இரவலரும் இந்நிலையில் இயைந்து செயல்படும் வகையில் அமைந்திருக்கும் உள்ளத்தின் நிலைப்பாட்டை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முக்கிய சொற்கள்:** போர், இரத்தல், மறகளவழி, ஆரம், வேழம், தடாரிப்பறை, பருந்து கூவும் களம், வேம்பின் பூ, பரிசில், களிறு, வேள்வி, காருண்யம், இரக்கம், கருணை, பரிதாபம், கழிவிரக்கம், அனுதாபம், பச்சதாபம்

**நம்பிக்கை – நடத்தை முக்கோணம்:**

மனித நடத்தையை புரிந்துகொள்ள அந்நடத்தைக்கு அடிப்படையாக விளங்கும் நம்பிக்கையை புரிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாததாகிறது. உலக இயல்பின் பாற்பட்ட நடத்தையின் அடிப்படை நம்பிக்கையைப் புரிந்துகொள்வது, எளிதாகவும் இயல்பாகவும் அமையும். ஆனால், உலக இயல்புக்கு மாறுபட்டு இருக்குமாயின், அந்நடத்தைக்கு காரணமான அடிப்படை நம்பிக்கையின் தன்மையினை ஆராயும்போதுதான், அந்நடத்தையைப் பற்றிய தெளிவு கிடைக்கும்.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

இதை புரிந்துகொள்ள ஏதுவாக இருப்பது "நம்பிக்கை – நடத்தை" முக்கோணம் ஆகும்.

1. உளவியல் கோட்பாட்டின்படி, மனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்வும், ஒரு அனுபவத்தை கொடுக்கும்
2. ஒவ்வொரு அனுபவமும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்
3. தாக்கத்தின் தன்மையும், தீவிரமும், ஆழமும், அம்மனிதனின் மனத்தின் திண்மையைப் பொருத்து அமையும்
4. மனத்தின் திண்மையானது தனிமனித மற்றும் சமூக மதிப்புகள் நெறிகள், சமூகக்கோட்பாடுகளைச் சார்ந்து அமையும்
5. தொடர்ந்து ஏற்படும் ஒரே விதமான தாக்கம், ஆதார/அடிப்படை நம்பிக்கைளுக்கு வித்திடும்
6. நம்பிக்கைகள் சுயத்தின் இயல்பினை நிர்ணயிக்கும்
7. இவ்வியல்பினைச் சார்ந்த மனோபாவம் பிறக்கும்
8. மனோபாவத்தினைத் தழுவி உணர்வுகள் எழும்
9. உணர்வுகள் அதனைச் சார்ந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்தும்
10. உணர்ச்சிகள் நடத்தையை தூண்டும்
11. நடத்தை விளைவுகளை நிர்ணயிக்கும்

<u>நம்பிக்கை – நடத்தை முக்கோணம்</u>




தனிமனிதனின் நடத்தையை பெரிதும் தூண்டுவது *"தேவையும், அவன் கடைப்பிடிக்கும்*

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

*கொள்கைகளும் கோட்பாடுகளுமே".* தனி மனித முடிவுகளையும், அம்முடிவுகளின் செயல்பாட்டையும் ஆளுமை செய்வது அவனது அடிப்படை கொள்கைகளாகும் (Values).
முடிவுகளாலும் செயல்பாடுகளாலும் ஏற்படும் தாக்கங்களை வழி நடத்துவது நெறிமுறைகளாகும் (Ethics).

ஒரு மனிதனின் அறம் சார்ந்த நிலை, அறம் சாரா நிலை - இதனை நிர்ணயிப்பது, அவன் எடுக்கும் முடிவுகளிலும், அதனால் ஏற்படும் விளைவுகளிலும் தெளிவாக தெரிய வரும்.

தனிமனிதனின் நடத்தையை புரிந்துகொண்டால், அம்மனிதனின் மனநிலையையும் அவனுள் பதிந்திருக்கும் நம்பிக்கையின் அமைப்பினையும் புரிந்துகொள்ள இயலும்.
நம்பிக்கை மாறுகையில், நடத்தையும் மாறும்!

அறநெறி கொள்கைகளும் அவை பின்பற்றப்படும்போது ஏற்படும் உயர்வும், மீண்டும் மீண்டும் ஒரு சமூகத்தின் அனுபவமாகும்போது, அறம் சார்ந்த வாழ்க்கைநிலை சமூகத்தின் அடித்தளமாக அமைகிறது.

அறநூல்களும், இலக்கியங்களும், காப்பியங்களும், புராண-இதிகாசங்களும், சமுகத்தின் அடித்தளமான நம்பிக்கைகளை வலியுறுத்தும் விதமாக அமைகிறது.
புறநானூற்றில் பாடல் #368 முதல் #373 வரையிலான பாடல்களில் மேற்கூறப்பட்டுள்ள உளவியல் நிலைப்பாட்டினை காணலாம். இப்பாடல்களில் புரவலரின் நடத்தையும், இரவலரின் நடத்தையும், பின்வருமாறு உளவியல் அடிப்படையில் ஆய்ந்து, கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| **நடத்தை-நம்பிக்கை முக்கோணக் கூறுகள்** | **இரவலர்** | **புரவலர்** |
|---|---|---|
| அனுபவங்களின் படிமம் | எத்தகைய நிலையிலும் மன்னனும் வள்ளல்களும் புலவர்களுக்கும், இரவலர்களுக்கும் கொடை கொடுத்து உதவுவதில் பிறழ மாட்டார்கள். | தமிழையும் தமிழ்ப் புலவர்களையும், நுண்கலைஞர்களையும் மன்னர்கள் பேணிப் போற்றினர். இந்தக் கொள்கையைக் காத்த நம்முன்னோர்கள், நீங்காப்புகழ் எய்தினர். |
| அடிப்படை – ஆதார நம்பிக்கை | தமிழையும் தமிழ்க் கலாசாரத்தையும் காக்கும் புலவருக்கும், ஏனைய இரவலர்க்கும், எப்போதும் | தமிழையும் தமிழ்ப் புலவர்களையும், நுண்கலைஞர்களையும் பேணிப் போற்றுவது புரவலர்களின் தலையாயக் கடமை.இக்கடமையைப் |

ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)
DOI: https://doi.org/10.63300/tm12022026

| | | |
|---|---|---|
| | எத்தருணத்திலும் புரவலர்கள், மதிப்பளித்து, பேணிக்காப்பர். | பேணுவதால், தமிழ் உள்ளவரை, தமிழினம் உள்ளவரை, மங்காப்புகழ் பெறலாம். இல்லையெனாது இருப்பதைக் கொடுக்காவிடில், மீளாப்பழிக்கு ஆளாக் நேரிடும். |
| சுயத்தின் இயல்பு | புலமையையும் திறமையையும் வளர்த்தல், தந்நலம் ஆயினும், பொதுநலம் ஆயினும், புரவலனின் சிறந்த ஆளுமை ஆயினும், தகுந்த நேரத்தில் தமிழ் கொண்டு பாராத்துவது. | புலமையையும், கலைத்திறமையையும் எந்நிலையிலும் தந்நிறைவோடு பேணுவது. |
| உணர்வின் தன்மை | தன்னைப்பற்றியப் பெருமை; புரவலரின் மீது நம்பிக்கை; வேண்டுவனக் கேட்பதில் தயக்கமின்மை; கிடைப்பதில் மனநிறைவு. | தன்னை நாடி இரவலர் வருவதில் மகிழ்ச்சி, பெருமை; தன்னிடம் கொடுக்க இருப்பதில் ஓர் மனநிறைவு; நீங்காப் புகழ் பெறலாம் என்ற எதிர்பார்ப்பு. |
| அனுகுமுறை | நேர்மறை எதிர்பார்ப்பு; உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கை; | உண்ணிப்பாகக் கேட்டலும்; இயன்றதை செய்யும் நோக்கமும்; |
| உணர்ச்சிகளின் வெளிப்பாடு | போற்றுதல்; உள்ளத்தூய்மையுடனும் தந்நிலை உணர்த்தல்; தேவையை உரைத்தல்; கிடைப்பதில் மனநிறைவு கொள்ள விழைதல்; | இன்முகத்தோடு வரவேற்றலும்; தேவையை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற உந்துதலும்; கொடுக்க இயல வேண்டும் என்ற உள்மனத்தவிப்பும்; |
| நடத்தை | இரந்து நிற்றல் | இயன்றதை, உயர்ந்ததாகக் கருதப்படுவதை அளித்தல் |
| விளைவு | மனநிறைவும் மகிழ்ச்சியும் | மனநிறைவும், தமிழால் பாடற்படுதலும். |

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

| | | |
|---|---|---|
| | | (தமிழுலகில் நீங்கா இடமும், தமிழுள்ளவரை மங்காப்புகழும்) |

**பாடல் வரிகளும் உரையும்**

**"களிறு முகந்து பெயர்குவம் எனினே..",** (புறம்..368...கழாத்தலையார்)

எனத் தொடங்கும் இப்பாடல், சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளியும், திருப்போர்புறம் என்னுமிடத்தே கடும் போர் புரிந்து, இருவேந்தரும் புண்பட்டுப் போர்க்களத்தே வீழ்ந்தனர். அந்தநிலையில், கழாத்தலையார் என்னும் புலவர், இரு மன்னரும் வீழ்ந்து கிடப்பது கண்டார். அவர் சேரமானைப் பார்க்கையில், அம்மன்னன், தன்னைப்பாடி, தன் கழுத்திலுள்ள ஆரத்தைப் பரிசிலாக பெற்றுச்செல்லுமாறு குறிப்புணர்தினான். அதுகண்டு, கையறமிக்க கழாத்தலையார், இப்பாடலைப் பாடினார்.

"வேந்தே! யானையை பெறலாம் என்றால், அவை அம்புபட்டுப் புண்ணுற்று வீழ்ந்துகிடக்கின்றன; தேர் பெறலாம் எனின், அவை சிதைந்து வீழ்ந்துகிடக்கின்றன; குதிரைகளை கேட்கலாமென்றால், அவை வாள்வெட்டுப்பட்டு இரத்தவெள்ளத்தில் கிடக்கின்றன! இதனால் இரவலர், பெருவளம் ஈய இயலாமை நிலையில், இரங்குவாராயினர். அதனால், நான் தடாரிப்பறை ஒலித்து, உன் தோளில் தவழும் அரவுப்போன்ற ஆரத்தைப் பெறுவதற்கென்றே வந்தேன் போலும்" எனப் பாடுகிறார்,

**உளவியல் சார்ந்த** கருத்து:

போர்களத்தில் தான் குற்றுயிராக இருப்பினும், தன்னிடம் உள்ள ஓர் பொருளை, ஒரு புலவருக்கு ஈந்து, தன்னுடைய ஈகைத்திறன் உய்ய, ஓர் புலவனுக்குக் கொடுக்க விழையும், மன்னனின் மனநிலையையும், அம்மன்னன் நிலையுணர்ந்து, அதனை நிறைவு செய்யும் புலவனின் மனப்பாங்கும், இப்பாடலில் தெளிவாக வெளிப்படுகிறது. பண்டை தமிழ் சமூகத்தின் நம்பிக்கையும் அதனைச் சார்ந்த நடத்தையையும் நாம் அறியமுடிகிறது.

**"இருப்பு முகஞ் செறிந்த ஏந்து எழில் மருப்பின்.. ",** **(புறம் 369...பரணர்)**

எனத் தொடங்கும் இப்பாடல், சேர மன்னர்களின் கடற்படையின் வன்மை நாடெங்கும் பரந்திருந்தது. இச்சமயத்தில், வேற்றுநாட்டவர் கடலில் கலம் செலுத்திக் குறும்புசெய்து வந்தனர். அவர்தம் குறும்பு மிகுவது கண்ட, வேல்கெழு குட்டுவன், அவரை வேன்று வேரறுத்து வாகை சூடினான். இந்த நிகழ்ச்சியை பதிவு செய்து பரணர் இப்பாடலைப் பாடினார். சேர மன்னனின் போர்செய்யும் விதமானது, ஏர்செய்யும் உழவன் போல் இருப்பதாக அமைத்து, அத்தகைய போரில், பொருநன் ஒருவன், தன் வறுமை தீரப் பாடி பொருள் கேட்பதாக, அமைத்து பாடுகிறார், பரணர்.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 02 (July-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12022026*

விளக்கம்:

“உழவுத்தொழிலுக்கு தேவையான மழை தரும் கருமேகமாக கருங்கை யானைப்படைகளும்; மழையுடன் தெரியும் மின்னலாக வாள்களின் ஒளியும்; முரசு ஒலி இடிமுழக்கம் ஆகவும்; வேகமாக வீசும் காற்றாக மிகவிரைவாகச் செல்லும் குதிரைகளாகவும்; வல்வில் கணைகள் மழைத் தாரகைகளாகவும்; குருதி தோய்ந்த படைக்களம் நீர் நிறைந்த வயலாகவும்; தேர் ஏராகவும், சேரன் உழவனாகவும்; இருக்கும் இப்போர் களத்தில், தடாரிப் பறை ஒலித்து வந்தேன், என் வறுமை நீங்க, கன்றும் பிடியும் விரவிய, இமயம் போல் இருக்கும் களிற்றினைப் பரிசாகத் தருவாய்” என ஒரு பொருநன் பாடுவதாகப் பாடுகிறார் பரணர்.

**உளவியல் சார்ந்த** கருத்து:

கொடிய போர் புரிந்து, அச்சமூட்டும் வகையில் பகைவரின் படைகளை அழிக்கும் மனநிலையில் இருக்கும் மன்னன், குரூரத்தின் கோபத்தின் உச்சத்தில் இருப்பான். மன்னன், அத்தகைய மனநிலையில் இருப்பதைக் கண்டும், ஒர் புலவன், மனதில் சிறிதளவும் நெருடல் இன்றி, மன்னனை வாழ்த்தி, தந்நிலை கூறி, பரிசில் கேட்டு நிற்பது என்பது, அச்சமூகத்தில் கொடையின்கண் நிலவிய நெறியினைக் காட்டுகிறது.

**"வள்ளி யோர்க் காணாது உய்திறன் உள்ளி.. ", (புறம்.370...ஊன்பொதி பசுங்குடையார்)**

எனத் தொடங்கும் இப்பாடல், சோழன் இளஞ்சேட் சென்னி, வட வடுகர் தொண்டை நாட்டில் புகுந்து தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தபோது, அவர்களை, பெரும் படையுடன் பாழி என்னும் இடத்தில், வென்று வெற்றி எய்தினான். இச்செய்தி அறிந்த ஊன்பொதி பசுங்குடையார், தன் வறுமையும் தன்னை சேர்ந்தவர்கள் வறுமையும் நீங்க, இப்பாட்டினைப் பாடி, அவன் பெற்ற களிறுகளைப் பரிசாக பெற எண்ணினார். புலவர் பாட வருங்கால், அவர் காடு பல கடந்து வரவேண்டியிருந்தது. அவர் மன்னனின் கொடைத் தன்மையின் மேல் கொண்ட நம்பிக்கையினால், தன் சுற்றத்தினரையும் தன்னுடன், காடு பல கடக்கச்செய்து அழைத்துவந்தார்.

**விளக்கம்:**

“வள்ளல் தன்மையுடைய பெருமக்களைக் காணமுடியாமையால், எவ்வாறு உயிர் வாழ்வது என்றென்னி, வருத்திய என் பெரிய சுற்றத்தார்க்கு, நிறைவாக உணவு கிடைக்கவேண்டும் என்பதற்காக, நான்கு திசைகளிலும் வெகு தூரம் காடு பலக் கடந்து, கண்டார்க்கு அச்சம் தரும் போர்க்களத்தைத் தனதாக்கி கொண்டவனே, நீ பகைவரை அழித்த விதம் கண்டால் போர்கள உரிமை உனக்கே உரித்ததாகும். உன் வெற்றியைப் பாராட்டி, நீ பகைவரிடத்து வென்ற, இரும்பினால் பூண் செறிக்கப்பெற்ற, அழகிய மருப்பினையுடைய, மலை போல் விளங்கும் களிறினை பரிசாகப் பெற வந்தேன்” என ஒரு பொருநன் பாடுவதாகப் பாடுகிறார் ஊண்பொதி

பசுங்குடையார்.

**உளவியல் சார்ந்த** கருத்து:

வள்ளல் தன்மை என்பதாவது, இரப்பவரின் நிலைஉணர்ந்து, அதற்கு மேலும் அவர் கேளாமலே, அவர் தேவைக்கு அதிகமாகக் கொடுப்பதாகும். அத்தகைய வள்ளலை காண இயலாத காரணத்தால், அமைதியான சூழ்நிலை அல்லாத போர்களத்திலும், தன் சுற்றதாரோடு வெற்றி வாகை சூடிய ஒரு மன்னனைப் போர்களத்தில் காண விழைந்து, பரிசில் பெற முற்பட்டார்.

கொடிய போர் புரிந்து, அச்சமூட்டும் வகையில் பகைவரின் படைகளை அழிக்கும் மனநிலையில் இருக்கும் மன்னன், குரூரத்தின், கோபத்தின் உச்சத்தில் இருப்பான். அத்தகைய மனநிலையில் இருக்கும் மன்னனிடம் ஒர் புலவன், மனதில் சிறிதளவும் நெருடலோ பயமோ இன்றி, மன்னனை வாழ்த்தி, தந்நிலைக் கூறி, பரிசில் கேட்டு நிற்பது என்பது, அச்சமூகத்தில் கொடையின்கண் நிலவிய நெறியினைக் காட்டுகிறது. தனிமனிதன் மட்டுமல்லாது, ஒரு சமூகமே இந்த நம்பிக்கையைப் போற்றி பாதுகாத்து வந்தது தெளிவாகிறது.

**“அகன்றலை வையத்துப் புரவலர்க் காணாது…” (புறம்.371…கல்லாடனார்)**

இப்புறநானூற்றுப் பாடலில், தலையாலங்கானத்துச் செருவென்றப் பாண்டியன் நெடுஞ்செழியன், தன்னை எதிர்த்த பகைவரை வென்று, பகைவீரர்கள், அவர்களின் களிறுகள், குதிரைகள் யாவும் போரில் புண்பட்டு வீழ்ந்தன. வீழ்ந்த பிணங்களை பேய் மகளிர் உண்டு மகிழ்ந்து, நெடுஞ்செழியனை வாழ்த்தினர். அப்போது, போர்களம் பாடும் பொருநன், மன்னனைப் பாடி பரிசில் பெறச் சென்றாதாக, அமைத்துப் பாடியிருக்கிறார், கல்லாடனார்.

**விளக்கம்:**

பேணிக்காக்கும் புரவலர்கள் இல்லாமையால், கடும் வறுமையில் வாடிய ஓர் பொருநன், ஒரு மரத்தடியில் தங்குகிறான். சோறு சமைப்பதற்குரிய அரிசியும் இல்லாமையினால், வேறு எந்த வேலையும் செய்ய மனம் விழையாமல், தன் பறை மற்ற இசைக்கருவிகள், நாரால் அமைத்த பூமாலையை அணிந்து, சோறு சமைக்கும் மட்பாணையையும் எடுத்துக்கொண்டு, தன் வறுமை நீங்க, பரிசில் பெறுவதையே மனதில் கொண்டு, வில்லை ஏராகக் கொண்டு போராகிய உழவினைச் செய்யும் நெடுஞ்செழியனை, பேய்மகள் குரவையாடி வாழ்த்துவதுபோல், தானும் அவனின் களம்வென்ற புகழைப் பாடி, பெரிய மலை போல் கால்களையுடைய யானையையும், மாவும், கலமும், தேரும் பெறும், நிலையை அடைந்து, மகிழ்ச்சியுற பாடுவதாக, அமைகிறது.

**உளவியல் சார்ந்த** கருத்து:

தன் போர்க்கள வெற்றியினால், பலரும் பலவிதமாக மகிழ்ச்சியடையும் நிலையை தரும் மன்னன், தன் வறுமை நிலையையும் போர்களத்தில் தீர்ப்பான் என்ற ஆழ்ந்த நம்பிக்கை இருந்தமையால், எந்த வேலையையும் செய்ய நினையாமல், மன்னனிடம் பரிசில் இரந்து

பாடியமை!

புரவலனும், போர்க்களத்தினால் மனநிலை எவ்வாறு இருப்பினும், இரவலருக்குத் தகுந்த மரியாதை அளித்து, அவரின் நிலை உணர்ந்து, அவருக்கு பரிசில் அளித்தமை!

இந்த இரண்டு நிகழ்வுகளும், சங்ககாலச் சமூகத்தின் ஆழ்ந்த நம்பிக்கைகளையும் – அதனால் விளையும் நடத்தைகளையும் எடுத்துக்காட்டுகிறது எனலாம்.

மாங்குடி கிழாரின் பாடல் ஒன்றில், பாண்டியன் நெடுஞ்செழியன், பகைவரை வென்று போர்க்களத்தில் களவேள்வி செய்து கொண்டிருந்தபோது, விழாவில் விருந்தினர் பலர் வருவது போல், அக்களவேள்விச்சாலைக்கு, மாங்குடி மருதனாரும் வந்து பாண்டியனை பாராட்டி, பொருநன் ஒருவன் பாடி, மன்னனிடம் முத்துமாலை பரிசில் கேட்பதாக அமைத்து பாடியுள்ளார்.

**“விசி பிணித் தடாரி விம்மென ஒற்றி,...” (புறம்.372...மாங்குடி கிழார்)**

ஏர்க்கள வேள்வி போல், போர்க்கள வேள்வி செய்தான் பாண்டியன் நெடுஞ்செழியன்.

“ஏர்க்களம் பாடும் இரவோர்க்கு கொடை செய்வதுபோல், போர்க்களம் பாடவந்திருக்கும் எனக்கும், உன் முத்துமாலை தந்து என் வறுமையைத் தீர்ப்பாயாக”

என்று ஒரு பொருநன் பாடுவது போல், அமைத்திருக்கிறார் மாங்குடி கிழார்.

**விளக்கம்:**

“கிணைப்பறை ஒலித்து, நின்னை பாராட்டிப் பாடவந்ததிற்குக் காரணம், பகைவர் தலையை அடுப்பாகவும், கூவிளங் கட்டையை அடுப்பெரிக்கும் கட்டையாகவும் கொண்டு, மண்டையோடும் வன்னிமரக்குச்சியும் கொண்டமைத்த அகப்பையால் கிளறியும், அதனைப் பேய்கட்கு அளித்து உண்பிப்பதுமாக, நீ செய்யும் களவேள்விக்கு, திருமணவிழாவிற்கு வரும் பல விருந்தினர்போல், நானும் வந்து நீ நல்கும் முத்துமாலையைப் பெறலாமென்றே”

**உளவியல் சார்ந்த** கருத்து:

கோரமான பயங்கரப்போரில், பார்ப்போர் மனதில் அச்சம் விளைவிக்கும் வகையில், பகைவர் படைக்கு அழிவை விளைவித்த மன்னன், அதைவிட மனதைத் தாக்கும் வகையில், மறக்கள வேள்வி நிகழ்த்தியதை இப்பாடல் பதிவு செய்கிறது.

படைக்கப்பட்ட காட்சியில், மன்னனின் ஆக்ரோஷமான மனநிலையை நாம் உணரமுடிகிறது. இத்தகைய மனநிலையில் உள்ள ஓர் மன்னன், பொருநனைக் கண்டவுடன், தந்நிலை உயர்ந்து, இரவலன் நிலையுணர்ந்து, அவன் வறுமை நீங்க உதவும் மனநிலைக்கு வருதல் என்பது, மொழிக்கும் கலைக்கும் சமூகத்தில் நிலவிய உயரிய நிலையை, நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய கிள்ளிவளவனின் இறுதிக்காலத்தில் வாழ்ந்தவர் கோவூர் கிழார். இக்குராப்பள்ளி என்னும் ஊர், தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவிடைக்கழி என்னும்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

ஊராகும். இம்மன்னனைப் போற்றிப் பாடியதாக, பொருநன் கூற்றில் வைத்துப் பாடியுள்ளார், கோவூர் கிழார்.

**'உருமிசை முழக்கென முரச மிசைப்பச்.." (புறம்.373...கோவூர் கிழார்)**

எனத்தொடங்கும் இப்பாடல்,

"சோழன், முரசம் மழையெனமுழங்க, களிறுகள் முகில்போல் திரள, தேரும் குதிரைகளும் மழைத்துளிப்போல பகைவரை சிதைக்க, அம்புகள் காற்றெனச் செல்ல, வீரருடனே கூடிக் கொங்கரொடு பொருது, அவர் புறந்தோடச் செய்தானெனவும், இவ்வாறே குடவஞ்சி நகர் முற்றத்திற் போருடற்றி, களவெற்றிக் கொண்டனன்!",

எனக் கோவூர் கிழார், பொருநன் சோழனின் களவெற்றியைப் பாடுவதாக அமைக்கின்றார்.

மேலும்,

"என் முன்னோர் களம்போற்றிப்பாடி, களிறு பல பரிசில் பெற்றோம் எனக் கூறக்கேட்டமையால், எங்களின் கடும் வறுமை தீர்க்க வேந்தர் பிறர் இல்லாமையால், நானும் அவ்வாறே உன் களவெற்றிப் பாடி பரிசில் வேண்டி வந்தேன்"

எனப் பொருநன் கோருவதாக அமைத்திருக்கிறார்.

**உளவியல் சார்ந்த** கருத்து:

"தன் முன்னோர்கள் களவெற்றிப்பாடி களிறுகள் பல பரிசு பெற்றமைக் கேட்டேன்", என்பதன் மூலம், களவெற்றி பாடுதல், போர்களத்தில் புரவலரிடம் இரந்து பாடுதல், புரவலரும் இரவலருக்கு ஈந்து போற்றி வந்துள்ளது, அறியமுடிகிறது.

சங்கத்தமிழ்ச் சமூகம், தமிழும் கலைகளும், அவை வளரக் காரணமாக இருந்த புலவர்களையும், கலைஞர்களையும், பேணிப் போற்றி வளர்த்தமை புறநானூற்றுப் பாடல்கள் மூலம் புலனாகிறது. மேற்கூறியப் பாடல்களில், அமைதிக்காலத்தில் மட்டுமல்லாது, மிகுந்த உணர்ச்சி கொந்தளிப்பு விரவியிருக்கக் கூடியப் போர்காலத்திலும், இந்த நடத்தையைக் பதிவிடுகிறது. இவ்வொழுக்கம், சமுகத்தின் ஆழ்ந்த நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறது.

**முடிவுரை:**

தனிமனிதன், குடும்பம், சமூகம், நாடு போன்ற இவையனைத்தும், செவ்வனே திறம்பட இயங்க, அடித்தளமாக விளங்குவது,

அங்கு:

- பதிந்திருக்கும்
- போற்றப்படும்
- பாதுகாக்கப்படும்
- ஆதரிக்கப்படும்
- அங்கீகரிக்கப்படும்

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12022026*

- உணரப்படும்
- உயர்த்தப்படும்
- கௌரவிக்கப்படும்
- கற்கப்படும்
- போதிக்கப்படும்
- செம்மைபடுத்தப்படும், நம்பிக்கைகளே!

இந்த நம்பிக்கைகள், அச்சமூகத்தின் அடையாளமாகத் திகழ்கின்றன. இவ்வடையாளங்கள் பதிவு செய்யப்படும் களங்களாக திகழ்வது

- இலக்கியப் படைப்புகள்
- நுண்கலைகள் – இயல், இசை, நாடகம், கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை போன்றவை
- வாழ்க்கை முறைமைகள்
- தனி மனித, குடும்ப, சமூகக் கொள்கைகள், மதிப்புகள், கோட்பாடுகள்
- போர்முறைகள்
- பண்பாட்டுச் சின்னங்கள்
- வழிபாட்டு முறைகள், சின்னங்கள்

மேற்கூறிய அடையாளங்களின் "தரமே" அச்சமூகத்தின், நாகரீகத்தின் தன்மையை, மேன்மையைப் பிரதிபலிப்பதாக அமைகிறது. இந்த கண்ணோட்டத்தில் நாம் சங்க இலக்கிய காலத்தினை, அதன் ஓர் அடையளமான புறநானூறு வாயிலாக ஆராயும்போது, நம் சங்கத்தமிழ்ச் சமூகத்தின் உயர்வை உணரமுடிகிறது, பெருமைப்படச் செய்கிறது.

x-------------x-------------x

**சான்றாதாரம்/துணைநூற்பட்டியல் (References):**

[1]. புறநானூறு - மூலமும் ஔவை துரைசாமி பிள்ளை விளக்க உரையும்
[2]. புறநானூறு - மூலமும் பழைய உரையும் - டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள்
[3]. An Invitation to Psychology – Prof. E G Parameswaran, Dr. C Beena
[4]. புறநானூறு பாடல்கள் – 368 முதல் – 373 வரை
[5]. புறநானூறு - ஓர் எளிய அறிமுகம் - சுஜாதா
[6]. புறநானூறு - புதிய வரிசை வகை - சாலமன் பாப்பையா

*I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work